IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.11/2025

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | RAMESH |
| FATHER'S NAME | : | DEVARAJAJULU |
| VILLAGE | : | KAMMAVARPUTHUR |
| OCCUPATION | : | ELECTRICIAN |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 8th day of APRIL 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கம்மவார்புதூரில் வசித்து வருகிறேன். எலெக்ட்ரிசீனியாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரை தெரியும். கடந்த 12.07.2024 ம் தேதி மாலை 6.25 மணிக்கு சேர்க்காடு கூட்டுரோடு செல்வதற்காக கிரணைட் கம்பெனி வளைவு அருகே செல்லும் போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. சென்ற பார்த்த போது லட்சுமி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. அந்த பேருந்து வேலூர் முதல் பொன்னை செல்ல கூடிய 20R ஆகும். விபத்து ஏற்பட்டவுடன் பேருந்தின் ஓட்டுநர் இறங்கி வந்து அந்த லட்சுமி என்பவரை பார்த்தார். அந்த ஓட்டுநர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். பின்னர் லட்சுமி என்பவரை ஆம்புலன்ஸில் ஏத்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடத்த இடத்திற்கும் கூட்டு ரோடுக்கும் இடையே 2 1/2 கிமீ தொலைவு இருக்கும். கூட்டுரோட்டில் இருந்து தெற்கு பக்கமாக கம்மாய்புதூர் கிராமம் உள்ளது. இறந்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். பேருந்து மெதுவாக செல்லும் போது இறந்த நபர் திடீரென குறுக்கே வந்தார் என்றால் சரிதான். பேருந்து உடனே நின்று விட்டது என்றால் சரிதான். 10 நிமிடத்தில்

ஆம்புலன்ஸ் வந்தது. நான்  இருக்கும் வரை போலிசார் வரவில்லை. நான் அன்று  சென்ற நாளில் இருந்து இன்று வரை போலிசார் பார்க்கவில்லை.  இறந்த நபர் என் ஊர்காரர் ஆவார்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 08.04.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.